[*1995 ஏப்ரல் 28*

495—

ஏரியூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

33124*—டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதியில் ஏரியூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) தற்போதைக்கு அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டுமென்று, அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். அப்படி அரசுக்குக் காலதாமதமாக கருத்துரு கிடைக்கப் பெற்றிருப்பின் அமைச்சரவர்கள் இதில் முன்னுரிமை அளித்து, இந்த ஆண்டே 30 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குகின்ற திட்டத்தின்கீழ் அதை அமைத்துத் தருகின்ற அந்தக் கமிட்டிக்கு பரிந்துரை செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.*

முற்பகல் 10-55

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 30 மேல்நிலைப் பள்ளிகள் வர இருக்கின்றன. 1216 மாணவ, மாணவியர்கள் அங்கே பயிலுகிறார்கள். ஆனால், இந்தப் பள்ளியை மேம்படுத்த கருத்துரு வந்தாலும், பொதுமக்கள் பங்குத் தொகையாக ·25 ஆயிரம் ரூபாய் மட்டும்தான் செலுத்தப்பட்டிருக்கிறது. அதனை ஒரு இலட்சம் ரூபாயாகச் செலுத்த*

1995 ஏப்ரல் 28]

வேண்டும். இன்னும் 75 ஆயிரம் ரூபாய் செலுத்துவதற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லாம் சரியாக வரப்பெற்றால், உயர்நிலைக் குழு, இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்கும்.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக 75 ஆயிரம் ரூபாய் கட்டி, அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே, அந்த உயர்நிலைப் பள்ளியை,மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், இப்படிப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குகின்ற சமயத்தில், மிகவும் தொழில் துறையிலும், கல்வித் துறையிலும் பிற்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை அளிப்பாரா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், இதற்கும் அந்த வாய்ப்பிருக்கிறது. முறையாக எல்லா நிபந்தனைகளையும் நிறைவு செய்து, கருத்துரு வரப்பெற்றால், அது உயர்நிலைக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 496, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

496—

திருவையாறு தொகுதியில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

*38084—**திரு. ப. கலியபெருமாள்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதியில் உள்ள செங்கிப்பட்டி ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

TRUTH ALONE TRIUMPHS